பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 04 2025 7 15

சனிக்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

- தமிழகத்தில் ராமேஸ்வரம் புதிய பாம்பன் பாலத்தை நாளை தாம் திறந்து வைப்பதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- இந்தியா -இலங்கை இடையே பாதுகாப்பு, எரிசக்தி. வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தானது.
- சத்திஷ்கரில் மாவோயிஸ்ட் தீவிரவாதத்துக்கு எதிராக அனைத்து நடவடிக்கைகளும் ஓராண்டுக்குள் முடிவுக்கு வரும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை நலத்திட்டங்களை இடையூறின்றி செம்மையாக மேற்கொள்வதற்கு உதவிடும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற்ற சென்னை அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி 25 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

தமிழகத்தில் ராமேஸ்வரம் புதிய பாம்பன் பாலத்தை நாளை தாம் திறந்து வைப்பதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் புனிதமான ராமநவமி நாளில் தமிழ்நாட்டில் சகோதர சகோதரிகளுடன் இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி அருள்மிகு ராமநாதசுவாமி ஆலயத்தில் பிரார்த்தனை நடத்த உள்ளதகாவும் பிரதமர் கூறியுள்ளார்,

எட்டாயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை தாம் தொடங்கி வைப்பதாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

ராமேஸ்வரத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ள பாம்மன் பாலத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி நாளை திறந்து வைப்பது நாட்டின் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக திகழும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செங்குத்தாக மேலெழும்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் தமிழ் காலாச்சாரத்தையும், தொன்றுதொட்ட நாகரீகத்தையும் சிறப்பிக்கும் வகையில் அமைந்துள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடியின் வழிகாட்டுதலின்படி கலைநுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாலம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இன்று ராமேஸ்வரம் செல்லும் மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், நாளை பாம்பன் புதிய பாலத்தை பிரதமர் திறந்து வைப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகளை பார்வையிடுகிறார்.

பிரதமரின் வருகையையொட்டி ராமேஸ்வரத்தில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

[]<<<>>>[]

இலங்கை பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி தலைநகர் கொழும்பில் அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திச நாயகே-வுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.,

இந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பாதுகாப்பு ஒத்துழைப்பு, மின் உற்பத்தி, இலங்கையின் கிழக்கு மாகாணத்திற்கு மானிய உதவி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் பல்வேறு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகின.

திரிகோணமலையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இணைந்து மேற்கொள்ளும் மின் உற்பத்தி திட்டமும், சாம்பூரில் 120 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் இரு தலைவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகின.

தம்புலாவில் தானிய சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கும், ஆன்மீகத் தலங்களில் ஐயாயிரம் சூரிய சக்தி மேற்கூரை அமைக்கும் திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முன்னதாக நடத்திய இருதரப்பு பேச்சுக்களில் இலங்கை அரசியல் சாசனம் 13-வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், அதன் அடிப்படையில் மாகாண தேர்தல்கள் குறித்த காலத்தில் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி இலங்கை அதிபரை கேட்டுக் கொண்டார்.

இந்திய பெருங்கடல் பகுதியில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்களை உடனடியாக திருப்பி அனுப்பவும், அவர்களின் மீன்பிடி படகுகளை ஒப்படைக்கவும், மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

வரும் நாட்களிலும் இருதரப்பு விஷயங்களை பகிர்ந்து கொள்வதற்கும் இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாகவும் இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

முன்னதாக இன்று காலை இலங்கையில் உள்ள தமிழ் அமைப்புகளின் தலைவர்களை திரு நரேந்திரமோடி சந்தித்து பேசினார்.

இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் அப்போது தெரிவித்தார்.

அவர்களுக்கு சம உரிமை மற்றும் நீதி கிடைக்க வேண்டுமென்று இந்தியா விரும்புவதாக திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

சத்திஷ்கரில் மாவோயிஸ்ட் தீவிரவாதத்துக்கு எதிராக அனைத்து நடவடிக்கைகளும் ஓராண்டுக்குள் முடிவுக்கு வரும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம் தண்டேவாடாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாவோயிஸ்ட்டுகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அம்மாநில பழங்குடியின மக்களின் கைவினை பொருட்களை ஊக்குவிக்கும் கண்காட்சி ஒவ்வொரு பழங்குடியின மாவட்டத்தி.லும் ஆண்டுதோறும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ராய்ப்பூரில் இடதுசாரி தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்து திரு அமித்ஷா உயரதிகாரிகளுடன் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.

[]<<<>>>[]

ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறை நலத்திட்டங்களை இடையூறின்றி செம்மையாக மேற்கொள்வதற்கு உதவிடும் என்று மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூரில் தனியார் நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற அது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

தேர்தல் செலவினங்களை கணிசமாக குறைக்கும் நோக்கிலேயே ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே நாடு ஒரேதேர்தல் குறித்து பேசி வரும் நிலையில், இது இறுதி வடிவம் பெற்று 2030-ஆம் ஆண்டுக்குப் பிறகே நடைமுறைக்கு வரும் என்று கூறினார்.

மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - நிர்மலா ) ----55 செகண்ட்*

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை வரவேற்றார் என்றும், அவர் இதை தமது சுய சரிதையில் குறிப்பிட்டுள்ளதையும் திருமதி நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

ஆனால் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இந்த நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும் அவர் குறை கூறினார்.

[]<<<>>>[]

தமிழ்நாடு, பீகார், இமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு தேசிய பேரிடர் நிவாரண கூடுதல் நிதியாக ஆயிரத்து 280 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய குழுவினர் ஆய்வு செய்து அளித்த அறிக்கையின் அடிப்படையில் கூடுதல் நிதி வழங்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு தேசிய பேரிடர் நிவாரண கூடுதல் நிதியாக 522 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக வலைதளப்பதிவில் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

வெளிநாடுகளில் படித்த மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வியை தொடர்வதற்கு நிலையான தகுதி கட்டமைப்பை உருவாக்க பல்கலைக்கழக மானியக் குழு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், வெளிப்படைத் தன்மையுடனும், தொழில்நுட்ப ரீதியாகவும் வெளிநாடுகளில் உள்ள பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் படித்த மாணவர்களுக்கு அங்கீகாரத்தை முறையாக வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழுவின் இந்த முடிவு குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த அதன் தலைவர் திரு ஜக்தீஷ்குமார், தேசிய கல்விக்கொள்கை இந்தியாவின் கல்வி கட்டமைப்பில் மாற்றத்தை கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பயின்ற மாணவர்களின் கல்வித் தகுதியை நியாயமான முறையில் அங்கீகரித்து அவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பை உறுதி செய்வதற்கு நிலையான தகுதி கட்டமைப்பு வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

நீண்டகாலமாக இருந்து வரும் இந்த கோரிக்கைக்கு தற்போது முடிவு காணப்பட்டிருப்பதகாவும் திரு ஜக்தீஷ்குமார் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிரான ஆட்.டத்தில் 25 ரன் வித்தியாசத்தில், தில்லி அணி வெற்றிபெற்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 183 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

184 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய சென்னை அணி ஐந்து விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள மற்றொரு போட்டியில் பஞ்சாப் - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

சண்டிகரில் நடைபெற உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

*End of News*